# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056, ஜூலை 5, 2025 Weekly E-paper • JJuly 5, 2025



# மிதிபடும் மானுடம்!

## நான் முதல்வன் நோக்கமும் தாக்கமும்!

நெல்லை பாபு

## கோட்டைக்குப் போகமாட்டார் எடப்பாடி!

தலையங்கம்

## ஓரணியில் தமிழ்நாடு

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ்(சனிக்கிழமை தோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2056, ஜூலை 5, 2025 Weekly E-paper • JJuly 5, 2025


## மிதிபடும் மானுடம்!

எந்த ஆட்சியில் நடைபெற்றாலும், சாத்தான்குளம், திருபுவனம் என்று எந்த ஊரில் நடைபெற்றாலும், இவை போன்ற நிகழ்வுகள் மிகக் கொடூரமானவை, மன்னிக்கப்பட முடியாதவை!


உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றாலும், திருபுவனம் ஒரு கரும் புள்ளியாகவே அமைந்துவிட்டது. "நடக்கக் கூடாதது, நடந்து விட்டது. மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று முதலமைச்சரைக் கேட்க வைத்திருக்கிறது!

பூட்ஸ் கால்களில் மானுடம் மிதி படுவதைக் கண்டு நெஞ்சம் பதறுகிறது! "ஆறுதலும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்" என்று அந்தத் தாய், கையெடுத்துக் கும்பிட்டுச் சொல்கிற அளவுக்கு நாட்டை இந்த நிகழ்வு கொண்டு வந்திருக்கிறது!

முதலமைச்சரோடு சேர்ந்து, நாம் அனைவருமே அந்தக் கொடுஞ்செயலுக்காக மக்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்வோம் !

-சுப.வீரபாண்டியன்.




பிளாஸ்டிக் குழாயால் அடிக்கப்படும்
ஒரு எளிய மனிதனின்
தீனக்குரல் கேட்கிறது
அவன் சாவுக்குப் பின்னும்
அக்குரல்
இலட்சோப இலட்சம் குரல்களாகி
காற்றில் கேட்கிறது

யாரும் சொல்லித்தரவில்லை
ஒரு போலீஸ்காரனாக இருப்பது
ஒரு மனிதனாக
இருப்பதும்கூட என்று

படுக்கையறையில்
சித்ரவதைகளுக்குப்பின்
தன்னைத்தானே மாய்த்துக்கொண்ட
ஒரு பெண்ணின் கடைசி வாக்குமூலம்
இலட்சோப இலட்சம் வாக்குமூலங்களாய்
மனதைச் சிதறடிக்கிறது

யாரும் சொல்லித்தரவில்லை
ஒரு கணவனாக இருப்பது
ஒரு மனிதனாய் இருப்பதும்கூட என்று

சித்ரவதைகள்
பிசாசுகளின் இடையறாத
ரத்த வேட்கைகள்
இதை நம்மால் நிறுத்த முடியவில்லை

சித்ரவதைகளை நிகழ்த்துபவர்கள்
கோழைகள்
அவர்களால் தங்களைவிட
வலிமையான ஒன்றுக்கு எதிராக
ஒரு துரும்பைக்கூட
அசைக்கவியலாது

அவர்கள் வணணத்துப் பூச்சுகள்
தங்கள் கைகளில் சிக்குவதற்காக
காத்திருக்கிறார்கள்
அதன் மெல்லிய சிறகுகளுக்காக

சாவின் பலிபீடங்களுக்கு
அத்தனை விரைவாய்
அழைத்துச் செல்லப்படுபவர்களுக்கு
விடுவித்துக்கொள்ள
ஒரு சிறிய நொடிகூட இல்லை
அவ்வளவு கச்சிதமாய்
வாழ்விற்கான பாதைகள்
மூடப்படுகின்றன

மனிதனாய் இருப்பது
ஒரு உயிரியல் தன்மை அல்ல
அது ஒரு வாழும் கலை
அவ்வளவு எளிதில்
கற்கமுடியாத கலை

ஒரு சித்ரவதை முகாமாகிவிட்ட பூமியில்
காசாவில் குழந்தைகள்
பட்டினியில் இறக்கிறார்கள்
நம் கண்முன்னே ஒரு மனிதன்
மரணத்தை நோக்கி
அடிக்கப்படும் காட்சி
செல்போனில் பதிவாகிறது

ஒரு பெண் தன் கடைசி வாக்குமூலத்தை
வாட்ஸப்பில் அனுப்புகிறாள்

எல்லாம் நமக்கு
மிக அருகில்தான்
நடந்துகொண்டிருக்கிறது

மனங்கசந்து
தனியாக இந்த அந்தியில்
வீடு திரும்புகிறேன்
எங்கும் பிசாசின் நிழல்கள்!

-மனுஷ்ய புத்திரன்

# நான் முதல்வன் நோக்கமும் தாக்கமும்!

நெல்லை பாபு




21ஆம் நூற்றாண்டின் வேகமாக மாறிவரும் சமூகத்தில், கல்வி மற்றும் திறன் மேம்பாடு என்பது ஒவ்வொரு தனிநபரின் முன்னேற்றத்திற்கும் நாட்டின் வளர்ச்சிக்கும் மிக அவசியமான கூறுகளாக மாறியுள்ளன . இதை உணர்ந்த தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டு இளைஞர்களின் எதிர்காலத்தை மேம்படுத்துவதற்கும், அவர்களை உலகத் தரத்திலான வல்லுனர்களாக உருவாக்குவதற்கும் ஏற்படுத்திய திட்டம் தான் "நான் முதல்வன்".

கல்விக் கட்டமைப்பைப் புதுமைப்படுத்தி, கல்வி கற்கும் சூழலை எளிமைப்படுத்தி, இளைஞர்களின் திறன்களை உலகத்தரத்திற்கு கொண்டு செல்லும் நோக்கத்துடனும் நவீன தொழில் உலகின் தேவைகளுக்கு ஏற்ப இளைஞர்களை தயார்படுத்துவதுமே இத்திட்டத்தின் அடிப்படை அம்சமாகும்.

“நான் முதல்வன்” திட்டம் அதிநவீன டிஜிட்டல் தளத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இந்த தளம் கல்லூரி மாணவர்களுக்குப் பாடநெறிகள் மற்றும் தொழில் சார்ந்த திறன் பயிற்சிகள் பற்றிய புதுப்புது தகவல்களை வழங்குகிறது. இதன் மூலம் மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான துறையில் பயிற்சி பெற்றுத் தங்களின் வாழ்க்கை இலக்குகளை அடைய உதவுகிறது.

| | |
|---|---|
| கலை மற்றும் அறிவியலில் 10 பல்கலைகளில் | 821 கல்லூரிகள் |
| பொறியியலில் அண்ணா பல்கலை மூலம் | 373 கல்லூரிகள் |
| பாலிடெக்னிக் | 459 |
| ஐடிஐ | 412 |

நான் முதல்வன் திட்டம் செயல்படுத்தப்படும் கல்வி நிறுவனங்கள்

| | |
|---|---|
| பொறியியல் கல்லூரி மாணவர்கள் | 4,60,734 |
| கலை, அறிவியல் கல்லூரி மாணவர்கள் | 8,53,785 |
| 2023-24ம் ஆண்டு | |
| பொறியியல் கல்லூரி மாணவர்கள் | 3,23,000 |
| கலை, அறிவியல் கல்லூரி மாணவர்கள் | 8,88,170 |
| பாலிடெக்னிக் மாணவர்கள் | 1,92,784 |
| ஐடிஐ | 64,149 |

2023-2024 ஆம் கல்வி ஆண்டில் பயிற்சி பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை:

| | |
|---|---|
| பொறியியல் கல்லூரி மாணவர்கள் | 3,29,342 |
| கலை, அறிவியல் கல்லூரி மாணவர்கள் | 5,67,019 |
| பாலிடெக்னிக் மாணவர்கள் | 1,84,361 |
| ஐடிஐ | 43,190 |

2024- 2025 ஆம் கல்வியாண்டு பயிற்சி பெற்ற மாணவரகள் எண்ணிக்கை:

## இத்திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு:

1. “நான் முதல்வன்“ திட்டத்தின் முதன்மை நோக்கம் ஆண்டுதோறும் 10 லட்சம் இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதாகும். இது மாநிலத்தின் வரலாற்றில் மிகப்பெரிய அளவிலான திறன் மேம்பாட்டு முயற்சியாக கருதப்படுகிறது. இந்த இலக்கை அடைவதன் மூலம் தமிழ்நாடு தேசிய அளவில் திறன் மேம்பாட்டில் முன்னணி மாநிலமாக உருவாகும்.
2. மாறிவரும் உலக சந்தைக்கு ஏற்ப இளைஞர்களுக்குத் தொழில் நுட்பத் திறன் பயிற்சியளித்து, அவர்களின் வேலைவாய்ப்புத் திறனை கணிசமாக அதிகரிக்க முடியும். இதன் வாயிலாக மாநிலத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவது.
3. தகவல் தொழில்நுட்பம், பொறியியல், மருத்துவம், விவசாயம், கைத்தொழில் போன்ற பல்வேறு துறைகளில் நவீன தொழில் நுட்பங்களை கற்றுக் கொடுக்கிறது.
4. அரசு கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவர்களுக்கு உயர் கல்விக்கான வழிகாட்டுதலை வழங்குவதும் இத்திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். இதன் மூலம் மாணவர்கள் மேல் படிப்பு குறித்து சரியான முடிவுகளை எடுக்க உதவுகிறது.
5. மத்திய அரசு பணிகளுக்கான தயாரிப்பில் சிறந்து விளங்கும் நோக்கத்துடன், இத்திட்டம் ஆண்டு தோறும் 1000 சிவில் சர்வீஸ் விண்ணப்பதாரர்களை தேர்வு செய்து அவர்களுக்கு சிறப்பு பயிற்சி மற்றும் வழிகாட்டுதல் வழங்குகிறது. UPSC தேர்வுக்கான சிறந்த பயிற்சியை இத்திட்டம் வழங்குகிறது.
6. பல்வேறு துறைகளிலிருந்து வரும் அனுபவமிக்க தொழில் வல்லுநர்கள் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் வழங்குகின்றனர். இதன் மூலம் மாணவர்கள் நடைமுறை அனுபவங்களையும் தொழில் உலகின் உண்மையான சூழலையும் புரிந்துகொள்ள முடிகிறது.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

*தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## கோட்டைக்குப் போகமாட்டார் எடப்பாடி!

நான்காண்டுகள் ஆட்சியில் மக்களுக்கு ஒன்றுமே செய்யாத முதலமைச்சர், போட்டோஷூட் மேடை போட்டு அரசு விழா என்ற பெயரில் அரசியல் பேசுகிறார் என்று அண்மையில் கூறியிருக்கிறார் எடப்பாடி பழனிச்சாமி.

நான்கு ஆண்டு கால திமுகழக ஆட்சியில் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் மக்களுக்கு என்னென்ன செய்திருக்கிறார் என்பதை மக்கள் வியந்து பேசுகிறார்கள்.

போட்டே ஷூட் நடத்துகிறாராம் முதல்வர். அது போட்டோ ஷூட் அல்ல. மக்களை நேரில் சென்று முதல்வர் சந்தித்துக் கொண்டிருக்கிறார் என்பது கூடத் தெரியாமல் ஞானசூன்யமாக அல்லவா இருக்கிறார் எடப்பாடி!

அரசியலைத் தெரிந்து பேசுவது எதிர்கட்சித் தலைவருக்கு அழகு. அரசியலே தெரியாமல், அரசியல் போல எதையாவது பேசிக்கொண்டிருப்பவர் இன்றைய எதிர்கட்சித் தலைவர்.

ஒன்றிய அரசு, தமிழ்நாட்டுக்குத் தரவேண்டிய நிதியைத் தரமறுக்கிறது. தெரியாதா எடப்பாடிக்கு? சரஸ்வதி நதியை இன்னமும் தேடிக்கொண்டு இருக்கும் ஒன்றிய அரசு கீழடி ஆய்வை ஏற்க மறுத்து வருகிறது என்பதாவது தெரியுமா எடப்பாடிக்கு?

இரயில்வே, அஞ்சலக, வங்கிப் பணிகள் போன்றவைகளில் தமிழர்கள் புறக்கணிக்கப் படுகிறார்கள் என்பது கூடத் தெரியவில்லையா எடப்பாடிக்கு?

கட்டுக்கோப்பாக அம்மையார் ஜெயலலிதா காலத்தில் இருந்த அதிமுக, தன்னால்தான் சிதைந்து, பலவீனப்பட்டுப் போய்விட்டது என்பது கூட புரியவில்லையா எடப்பாடிக்கு?

அண்ணா திமுகவை அமித்ஷாவிடம் அடமானம் வைத்த அவருக்கு அரசியலும் தெரியவில்லை, தன் கட்சியும் புரியவில்லை. ஆனால் அவர்தான் எதிர்கட்சித் தலைவர்!

எடப்பாடி நேர்மையாக அரசியல் பேசவேண்டும், வரவேற்போம். அதைவிட்டு திமுகவை, தமிழ்நாடு முதல்வரைப் பற்றி உளறிக்கொட்டக் கூடாது.

2026இல் திமுகவை மக்கள் வீட்டுக்கு அனுப்புவார்கள் என்று சொல்லும் எடப்பாடியார்தான் இனி எப்போதும் வீட்டிற்குள்தான் இருப்பார், கோட்டைக்கு போகமாட்டார். இது மக்களின் முடிவு!

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**
பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**
உதவி ஆசிரியர்கள்:
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**
வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
**120 என்.டி. ராமராவ் தெரு,**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை- 600 024,**
தொலைபேசி: 044-2472 6408

முன்பக்கத் தொடர்ச்சி...

7. பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு இத்திட்டம் மூலம் நிதி உதவியும் வழங்கப்படுகிறது. குறிப்பாக UPSC தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு 10 மாதங்களுக்கு மாதம் ரூபாய் 7,500 வீதம் உதவித் தொகை வழங்கப் படுகிறது.

### நான் முதல்வன் ஏற்படுத்திய தாக்கங்கள்:

1. நான் முதல்வன் திட்டம் மூலம் மாணவர்களின் கல்வி கற்கும் திறனும் செயல்திறனும் மேம்பட்டுள்ளன. பள்ளி மற்றும் கல்லூரிகளில் சேர்க்கை விகிதம் அதிகரித்துள்ளது, அதற்கேற்ப பட்டம் பெறுபவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது.
2. இத்திட்டத்தின் மூலம் பயிற்சி பெற்ற மாணவர்களின் வேலை வாய்ப்பு பெறும் திறன் கணிசமாக மேம்பட்டுள்ளது. தொழில்நுட்பத் திறன்களைப் பெற்றதால், இளைஞர்கள் வேலைவாய்ப்பு சந்தையில் போட்டித்திறனுடன் செயல்பட முடிகிறது. பல்வேறு நிறுவனங்கள் இந்த பயிற்சி பெற்ற மாணவர்களை விரும்பி பணியமர்த்துகின்றன.
3. திறன் மேம்பாட்டு பயிற்சியின் மூலம் பல இளைஞர்கள் தங்களின் சொந்த தொழில்களை ( Start Up) தொடங்கும் தன்னம்பிக்கையை பெற்றுள்ளனர். இதன் மூலம் மாநிலத்தில் தொழில் முனைவோர் கலாச்சாரம் வளர்ந்து வருகிறது. புதிய வணிக யோசனைகள் மற்றும் தொடக்க நிறுவனங்கள்உருவாகி வருகின்றன.
4. நான் முதல்வன் திட்டம் மாநிலத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத் தக்கப் பங்களிப்பை வழங்கி வருகிறது.
5. பல உலக நிறுவனங்கள் தங்கள் தொழில் மையங்களை தமிழ்நாட்டில் உருவாக்கிட இத்திட்டம் ஊக்குவித்துள்ளது. இதன் மூலம் புதிய வேலை வாய்ப்புகள் உருவாகி மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி விகிதம் அதிகரித்துள்ளது.
6. இத்திட்டம் சமூகத்தின் பல்வேறு பிரிவினருக்கு சமமான வாய்ப்புகளை வழங்கியுள்ளது. குறிப்பாக பின்தங்கிய பிரிவினர் மற்றும் கிராமப்புற மாணவர்களுக்கு இது பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது. சமூக நீதியை வளர்ப்பதிலும் இத்திட்டம் முக்கிய பங்காற்றியுள்ளது.

எதிர்காலத்தில் இத்திட்டத்தை மேலும் விரிவாக்கி, புதிய தொழில்நுட்பங்களை சேர்த்து, சர்வதேச தரத்திற்கு கொண்டு செல்லும் திட்டங்கள் தமிழ்நாட்டை கல்வி மற்றும் திறன் மேம்பாட்டில் உலக அளவில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உருவாக்கும்.

“நான் முதல்வன்” திட்டம் வெறும் கல்வி திட்டம் மட்டுமல்ல, மாறாக தமிழ்நாட்டின் இளைஞர்களின் வாழ்க்கையை மாற்றும் ஒரு சமூக புரட்சியாகும். இதன் மூலம் ஒவ்வொரு தமிழ்நாட்டு இளைஞனும் உண்மையிலேயே “நான் முதல்வன்” என்று நம்பிக்கையுடன் சொல்லக்கூடிய நிலையை, முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஏற்படுத்துவார்.

இப்படி இளைஞர்களின் முன்னேற்றத்திற்காகவும் நாட்டின் வளர்ச்சிக்காகவும் சிந்தித்து செயல்படுகிற அந்தத் தலைவரின் கரத்தை வலுப்படுத்துவதே அவருக்கு நாம் செய்யும் கைமாறு. ●

# ஓரணியில் தமிழ்நாடு

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

திராவிட மாடல் அரசின் திட்டங்களும் சாதனைகளும் 2026 சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகும் வெற்றிகரமாகத் தொடர்ந்திட "ஓரணியில் தமிழ்நாடு" என்ற பரப்புரையின் மூலம் உறுப்பினர் சேர்க்கையை திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கியிருக்கிறது.

தமிழ்நாட்டு மக்களிடையே மதவாதப் பிரிவினையை உருவாக்க நினைப்பவர்களுக்கும், அவர்களுக்குத் துணை போகிற துரோகிகளுக்கும் தமிழ்நாட்டில் இடமில்லை என்பதை மக்கள் உறுதி செய்யும் வகையில் ‘ஓரணியில் தமிழ்நாடு’ பரப்புரை ஜூலை 1 முதல் 45 நாட்களுக்கு முன்னெடுக்கப்படுகிறது.

மேலோட்டமாக பார்க்கையில் இந்த முன்னெடுப்பு தி.மு.கவுக்கான உறுப்பினர் சேர்க்கை போலத் தோன்றும். உண்மையில் இது தமிழ்நாட்டின் நலன் காக்க மக்கள் அனைவரையும் ஓரணியில் திரட்டும் முயற்சி ஆகும்.

தமிழ்நாட்டில்உள்ள68,000வாக்குச்சாவடிகளிலும் உள்ள வாக்காளர் எண்ணிக்கையில் குறைந்த பட்சம் மூன்றில் ஒரு பங்கு வாக்காளர்களை கழக உறுப்பினராக இணைப்பது என்ற இலக்கை நோக்கி இப்பரப்புரை திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இல்லங்களுக்கும் (எதிர்க்கட்சியினர் இல்லங்கள் உட்பட) அந்தந்த வாக்குச் சாவடியைச் சேர்ந்த பூத் லெவல் ஏஜென்ட், பூத் டிஜிட்டல் ஏஜென்ட், இளைஞரணி பொறுப்பாளர், மகளிரணி பொறுப்பாளர், வட்ட / கிளை செயலாளர், மாநில / மாவட்ட நிர்வாகி / மக்கள் பிரதிநிதி என ஆறு பேர் தி.மு.கவின் சார்பில் சென்றுதிராவிடமாடல்அரசின்சாதனைகளையும், மாற்றாந்தாய் மனப்பான்மையோடு ஒன்றிய அரசு தரும் நெருக்கடிகளையும் எடுத்துரைப்பார்கள். அக்குடும்பம் சார்பில் அரசுக்கு கோரிக்கைகள் தெரிவிக்கப்பட்டால் அவற்றை அவர்கள் குறித்துக் கொள்வார்கள் விருப்பம் உள்ளவர்களை கழக




உறுப்பினராக "ஓரணியில் தமிழ்நாடு" செயலி மூலமும், உறுப்பினர் சேர்க்கை படிவம் மூலமும் இணைத்துக் கொள்வார்கள்.

ஐந்தாம் ஆண்டில் அரசு நடைபெற்று வரும் நிலையில் ஆளும் கட்சி வீடு வீடாக சென்று மக்களைச் சந்திக்கிறது என்றால் அதிருப்தியற்ற ஆட்சியை அக்கட்சி அளித்து வருகிறது என்று பொருள். இந்த ஆட்சியின் திட்டங்களால் ஒவ்வொரு வாக்காளரும் ஏதோ ஒரு வகையில் பலன் அடைந்திருக்கிறார்கள் என்பதை உறுதி செய்வதே "ஓரணியில் தமிழ்நாடு" பரப்புரையின் மைய நோக்கமாகும்.

"மக்களிடம் செல், மக்களுடன் வாழ், மக்களிடமிருந்து கற்றுக்கொள், மக்களை நேசி, மக்களுக்கு சேவை செய்" என்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் வாய்மொழிக்கேற்ப நடத்தப்படும்"ஓரணியில் தமிழ்நாடு" பரப்புரை " வெல்வோம் இருநூறு படைப்போம் வரலாறு" என்ற முழக்கத்தை சாத்தியமாக்கும் என்றால் அது மிகையாகாது.

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian